Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (07 - 12 - 1990) வெள்ளிக்கிழமை ஓசை 282

## பொலிஸ் அறிக்கையின்றி அறிமுக அட்டை பெற முயற்சி

(யாழ்ப்பாணம்)

தொலைந்துவிட்ட தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக பொலிஸ் அறிக்கை இல்லாமலேயே புதிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக யாழ். அரச அதிபர் சில ஒழுங்குகள் செய்ய இருக்கிறார்.

கடந்த காலங்களில் தமது தேசிய அடையாள அட்டையைத் தொலைத்து விட்டவர்கள் பொலிஸ் அறிக்கை இல்லாது புதிய (4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் மனித உரிமை மீறலுக்கு எதிராக சர்வதேச மன்னிப்புச் சபையின் உலகளாவிய பிரச்சாரம்

(லண்டன்)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை உலகளாவிய பிரச்சாரம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது. செப்ரெம்பர் 19-இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரச்சார இயக்கம் டிசம்பர் 31-ஆம் திகதியுடன் முடிவடையும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இலங்கையில் ஒட்டு மொத்தமாக மனித உரிமைகள் அவமதிக்கப்படுதல், தொடர்ச்சியாக மனித உரிமைகள் மீறப்படுதல், துன்புறுத்துதல், விசாரணையின்றித் தடுத்து வைத்தல், தண்டித்தல் 'காணாமற்போதல்' ஆகியன சிறிலங்கா பற்றிய பிரச்சார இயக்கத்தின் முனைப்பான அம்சங்களாகும்.

இந்த பிரச்சார இயக்கமானது பின்வருமாறு அமையும் என மன்னிப்புச் சபையின் பத்திரிகைக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை சர்வதேச மட்டத்தில் விளம்பரப்படுத்தல், மனித உரிமைகளுக்கு முழுமையான மதிப்பளிக்க சிறிலங்கா அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தல்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 100 வெள்ளைக் கொடிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வலயப் பகுதியைத் தெளிவாகத் தெரியப்படுத்தும் முகமாக மேலும் 100 வெள்ளைக் கொடிகள் பறக்கவிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது. இன்று முதல் இவ் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்படும். (85)

## மீளப்பெற முடியாது

அரசின் சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான 44/90 இலக்க சுற்று நிருபத்திற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## நோக்கம் தவறியதால் ஆதரவாளர், பொதுமகன் பலி

(மட்டக்களப்பு)

நேற்றுமுன்தினம் ரெலோ இயக்கத்தவர்கள் சிறிலங்கா இராணுவத்தினர்களுடன் இணைந்து களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் இருந்து வெளியேறி எருவில் என்ற பகுதியை முற்றுகை இட்டனர்.

இந்த முற்றுகையின்போது விடுதலைப்புலிகளின் நெருங்கிய ஆதரவாளர் வீரசிங்கம் நாதன் (27வயது) துப்பாக்கியால் சுட்டுப் படுகாயமுற்ற நிலையில் நிலத்தில் வீழ்ந்தார். துப்பாக்கிச்சூட்டால் காலில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் குண்டு வீச்சு; ஐவர் பலி; ஒருவர் படுகாயம்

பருத்தித்துறையில்நேற்றுஇரு விமானங்கள் கண்மூடித்தனமாக இரு குண்டுகளை வீசியதில் ஸ்தலத்தில் ஒரு பெண் மணி உட்பட ஐந்துபேர் பலியானார்கள், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தனியார் மருத்துவ நிலையம் உட்பட கல்வி நிலையம், மூன்று கடைக் கட்டடங்கள், ஒரு வீடும் சேதமடைந்துள்ளன.

காலை 9-30 மணியளவில் பருத்தித்துறை நகருக்கு வந்த இரு விமானங்கள் இரு தடவைகள் சுற்றி வட்டமிட்ட பின் குண்டுகளை வீசியதில் ஜோர்ஜ் அருட்பிரகாசம் (வயது 50) ஆசிரியர், மயிலிட்டி அகதி இருவர். அதில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் குண்டு வீச்சு மூதாட்டி பலி; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று யாழ். குடாநாட்டில் பரவலாகக் குண்டுகளை வீசின. சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக் காலை 7.45 மணிக்கும் 11.45 மணிக்குமிடையில் நான்கு குண்டு வீச்சு விமானங்கள் இரு தடவைகள் குண்டுகளை வீசின. காலையில் சாவகச்சேரி வாசிநாதர் சிவன் கோவில் மீது நான்கு தடவைகள் குண்டுகள் வீசப்பட்டதால் கோயில் பாரிய சேதத்திற்குள்ளாகியது. புகையிரதக் கட்டடம் மீது இரு முறைகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் பெயரை செஞ்சிலுவை நிராகரிப்பு

மாவீரர் பெயரை வீதியின் பெயராகப்பாவிப்பதை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நிராகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளைப் பெறச் செல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக்குண்டு வீச்சிற்கு வலி-வடக்கில் வீடுகள்சேதம்

அம்பனை, கொல்லன்கலட்டிப் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலினால் பலவீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் அம்பனைப் பகுதியில் வீசிய குண்டுகளினால் சண்முகநாதன், சிவபாலன், கதிர்காமத்தம்பி ஆகியோரது வீடுகள் உட்பட ஐந்து வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து ஷெல்; தாயும், மகளும் பலி

(நல்லூர்)

பலாலிசிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கோப்பாய், உரும்பராய், புன்னாலைக்கட்டுவன் போன்ற பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் பலர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் உரும்பராயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், மகளும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மூவர் காய (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம் புவின்

(வீமன்காமம்)

நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் வீமன்காமம் பகுதியை நோக்கி வர முயன்ற இராணுவத்தினருடன் நடந்த கடுமையான மோதலில் புவின் (சத்தியநாதன் சிவக்குமார் ஏழாலை) என்பவர் வீர மரணமடைந்தார்.

வீர மரணமடைந்த புவினுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 3,500 விண்ணப்பங்களுக்கு அடையாள அட்டை வரவில்லை

யாழ். மாவட்டத்தில் இருந்து தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு சுமார் 3500 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டபோதிலும் இதுவரை அவற்றுக்குரிய அடையாள அட்டைகள் அனுப்பிவைக்கப் படவில்லை.

கடந்த யூன் மாதத்திற்கு பின்பு யாழ். மாவட்டத்திற்கு எந்த ஒரு அடையாள அட்டைகளும் அனுப்பி வைக்கப்படவில்லை. எனினும் தொடர்ந்தும் இங்கிருந்து பல விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. (க)

## அகதி முகாம்களுக்கான உணவு விநியோகம் அரசஅதிபர் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களினால் இதுவரை பராமரிக்கப்பட்டு வந்த அகதிகள் முகாம்களுக்கான வாராந்த உணவுப்பொருள் விநியோகத்திற்கான நடவடிக்கைகளை யாழ். அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கையானது டிசம்பர் முதல் வாரத்தில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது. இதன்படி முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் தத்தம் முகாம்களுக்கு அண்மையில் உள்ள ப.நோ.கூட்டுறவு சங்கக்கிளைகளிலிருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## முரண்பாடான அறிவித்தலால் நியமனங்கள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பான அரசின் முன்னுக்குப்பின்னான முரண்பாடான அறிவித்தல் தொடர்பாக யாழ்.பிராந்தியக் கல்விப்பணிப்பாளர், கல்விச்சேவைகள் ஆணைக்குழுத் தலைவருடன் நேற்று வியாழக்கிழமை வானொலிக்கருவிமூலம் தொடர்புகொண்டு மேற்படி முரண்பாடுபற்றி அறிவித்துள்ளார்.

எனவே யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவரின் பதில் கிடைத்த பின்னரே தீர்மானிக்கப்படும் என்றும் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ரதி வோச் வேக்ஸ்**

வட மாகாணத்தில் சகல மணிக்கூடுகள் திருத்துவதிலும் விற்பனை செய்வதிலும் 50 வருட நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம். நாட்டு நிலை சீரின்மையால் ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையில் இயங்கி வருகிறது. (திருத்துதல் வேலைகள் வழமைபோல் நடைபெறுகின்றது.)

(B-1648)

---

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(R/888)

---

**போட்டோஸ்ரட்**

'ஸ்கைலைன்ஸ்'

தரமான போட்டோஸ்ரட் றோணியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். 281 B. மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். SKYILINES'281,B,Clock Tower Road, Jaffna (ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை) (B/1662)

---

**தவறிவிட்டது**

நி. கணநாதன் வல்வெட்டித்துறை வதிவிடத்தைச் சேர்ந்த 701812875V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் கல்லூரி அட்டையும் 21-10-90 இல் கிளிநொச்சி சேரதீவுப் பாதையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி மின்சார நிலையக் காரியாலயத்திலோ அன்றி யாழ்ப்பாணம் ஈழநாதம் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் உண்டு.

(R-907)

---

**யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

7. 12. 1990 இன்று முதல் வழமைபோல் பாண் உற்பத்தியை சகல பேக்கரிகளும் ஆரம்பிக்கலாம். ஆகக் குறைந்த நிறை 350 கிராமாக இருக்கவேண்டும் என்பதை அறியத்தருகின்றோம். முக்கிய விடயங்கள் நாளைய பத்திரிகையில் வெளிவரும்.

(R-909) -- காரியதரிசி

---

**சில்வர்**

**ரேடேர்ஸ்**

இல. 3B(11), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எங்களிடம்:

பிஸ்கட்வகைகள், ரொபி, இனிப்பு, தேயிலை, சொப்பிங்பாக், பவுடர் யாவையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(B/1680

---

## மிருகநோய்த் தடுப்பு மருந்து இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மிருக வைத்திய நிலையங்களில் எவ்விதநோய்த்தடுப்புமருந்து வகைகளும் இல்லை. இதனால் யாழ். மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு தொற்றுநோய்கள் ஏற்பட்டால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுமென மிருக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஶ்ரீதர் சினிமா முன்பாக)

## கலை, வர்த்தகம்

**DAY CLASS**

**ஆரம்பம் 10-12 90 திங்கள்**

**A/L 90 காலை 8-00 மணி**

**A/L 91 காலை 9-00 மணி**

A/L 90, 91, 92 சனி, ஞாயிறு

(B/1676) வகுப்புகள் நடைபெறுகின்றன.

---

## தவறிவிட்டது

வேலணை மேற்கு பரஞானசம்பந்தபிள்ளை சிவலோகநாதன்

என்பவருடைய தேசிய அடையாள அட்டை

(441341679V)

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியினுள் நின்றபோது தவறிவிட்டது. இது அவருக்கு ஒவ்வொருநாளும் தொழில் நிமித்தம பாவனைக்கு உரியது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து சிரமத்தைப் பாராது நல்லூருக்கு முன்பாக உள்ள ''மண்டேலா ரேடர்'' புத்தகசாலையில் ஒப்படைக்கவும். மறக்க முடியாத உதவியாக இருக்கும். அத்துடன் சன்மானமும் வழங்கப்படும்.

(R/906)

---

## இடம்மாற்றம்

## அரஸ் ஜவுளியகம்

மீண்டும் பழைய இடமான 146, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(R/904)

---

## 1 ஆம் ஆண்டு திதி



திருமதி

**சாந்திமதி திருஞானசுந்தரலிங்கம்**

(புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய ஆசிரியை)

முகிழ்ப்பு 1963-03-07

உதிர்ப்பு 1989-11-19

நெஞ்சம் முழுவதும்
துயரத்தால் தேய்ந்து போக
நிதானமாக உன் இழப்பைத்
தாங்கி ஊமையாகிப் போகின்றேன்!
காலங்கள் உன் இழப்பை எப்படி
ஈடு செய்யும்?

திதி: 1990-12-08 சனிக்கிழமை வீட்டில் நடைபெறும் திவசத்தில் கலந்து கொண்டு, சாந்தியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு நண்பர்கள், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. திருஞானசுந்தரலிங்கம் கணவர் உறவினர்கள்.
7 ஆம், வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(R/881)

---

## 2 ஆம் ஆண்டு வீர அஞ்சலி



**லெப்டினன்ட் அசோக்**

(சிவகுரு சிறீதரன்)

வீரத்தாய் மடியில்: 5 - 10 - 1966 விடிவிற்கு முந்திய மரணம்: 7 - 12 - 1988

இதய தெய்வமே அசோக்!

நெஞ்சில் உறங்கும் உன் விடுதலை நெருப்பை
அந்நியன் பஞ்சில் சொருகத் சென்றாயே - நீ
சிங்களவன் சிறைவைத்த - எங்கள்......
நாட்டு சுதந்திரத்தை சிறை மீட்க மடிந்தாயே!
நெஞ்சுக்கு நேரே துப்பாக்கி நீட்டினும்
அஞ்சா நெஞ்சுடன் களம் பல புகுந்தாய் - நீ
நேசித்த ஈழம் தன்னை காண்பதற்கு முன்னே
அந்நியன் உன்னை ''சயனைட்'' அருந்த வைத்தானே?

நினைவுக் கோயிலில் நித்தம் எரியும்
நிர்மல ஜோதியே அசோக்.........
நீ மறைந்து ஈராண்டு ஆகிடினும்
நிரந்தரமாய் வீற்றிருக்கின்றாய் எம் மனதில்!

புலோலி மேற்கு, -குடும்பத்தினர்
பருத்தித்துறை. (R/898)

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. வல்லிபுரம் கந்தசாமி

தோற்றம்: 22-04-1926 மறைவு: 18-12-1989

**திதி: 7 - 12 - 1990**

என் அன்புத் தெய்வமே! உண்மையின் சிகரமே! பாசத்தின் உறைவிடமே! பண்பின் ஒளிவிளக்கே! ஆண்டு ஒன்று ஆயினும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்கள் எம் நெஞ்சை விட்டு அகலாதையா! என் ஆருயிரே! நீங்கள் இல்லாத என் வாழ்வு மதியிழந்த வானம் போல் காட்சியளிக்கின்றதே! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

நல்லனார் இணற்றடி, அன்புள்ள மனைவி,
தெல்லிப்பளை கிழக்கு, பிள்ளைகள்.
தெல்லிப்பளை. (R/894)

### சிந்தனைக்கு

முகநக நட்பது நட்பன்று - நெஞ்சத்து
அகநக நட்பே நட்பு.

— திருவள்ளுவர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## நட்டார்போல் நல்லவை சொல்லினும்...

சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா ஒரு வார கால இரகசியப் பயணத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார். இந்தப் பயணத்தின்போது பாகிஸ்தான் இராணுவத் தளபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதோடு ஆலோசனையும் நடத்தவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் பயணம் விசேட முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. நட்பு ரீதியானது எனக்கூறப்பட்டிருப்பினும், இந்தப்பயணத்தின் பின்னணியில் உள்ள இராணுவ ஒத்துழைப்புப் பற்றி எவருக்கும் சந்தேகம் எழாமல் இருக்க வாய்ப்பில்லை.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண எவ்வளவுதான் இராணுவத்தைப் பற்றிப் பெருமை பேசிக் கொண்டிருப்பினும் மாங்குளம் இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தமை சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையே ஏற்படுத்தியுள்ளது. இதனை சிறிலங்கா அரசியல்வாதிகளும் உணர்ந்துள்ளனர். வற்றை சர்வதேச செய்தி ஸ்தாபனங்களும் உறுதி செய்துள்ளன. இந்த நிலையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கான ஒத்துழைப்பையும் உதவியையும் நாடியே ஹமில்டன் வணசிங்கா பாகிஸ்தான் சென்றுள்ளார்.

இந்த வருடம் ஜூன் மாதம் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் மோதல் தொடங்கியதில் இருந்து சிறிலங்காவிலிருந்து பாகிஸ்தானுக்கு பல இரகசியப் பயணங்கள் அரசியல் இராணுவ வட்டாரங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் பாகிஸ்தானிடமிருந்து ஆலோசனைகளும் உதவிகளும் பெறப்பட்டன. பாகிஸ்தான் செய்த உதவிகளில் பெரிய உதவியாக அமைந்தது ஈரானிடமிருந்து கனரகஆயுதங்களை மலிவு விலையில் வாங்குவதற்கு செய்து கொடுத்த ஏற்பாடாகும்.

இந்த நிலையானது 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை சமாதான உடன்பாட்டிற்கு முன்னர் சிறிலங்கா பாகிஸ்தான் உறவு இருந்த நிலையில் தற்பொழுதும் எந்தவித மாற்றமும் ஏற்பட்டதாக இல்லை. அதாவது தொடர்ந்தும் தான் சிறிலங்காவின் ஆப்த நண்பன் என பாகிஸ்தான் உணர்த்திய அதேவேளை சிறிலங்காவும் இதனை உணர்த்தி வருகின்றது.

அதேவேளை இந்தியா விரும்புவது போன்று சிறிலங்கா இந்தியாவுடன் நட்பை ஏற்படுத்திக்கொள்ள தயாராக வில்லை. அதாவது இந்தியாவை நண்பனாக ஏற்கவோ அல்லது நம்புவதற்கோ சிறிலங்கா தயாராக இல்லை; ஆனால் இந்தியா அதைப் புரிந்து கொண்டதாகவோ உணர்ந்துகொண்டதாகவோ தெரியவில்லை.

இதனால் இந்தியா தொடர்ந்தும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், அதிகாரிகளுக்கும் இந்தியாவில் பயிற்சி அளித்து வருகின்றது. அத்தோடு இந்திய புதிய பிரதமர் சந்திரசேகரர் ஜனாதிபதி வெங்கட்ராமன் உட்பட பலரும் சிறிலங்காவிற்கு உதவி அளிப்பதற்கு இராணுவ உதவி உட்பட தயாராக இருப்பதாக அறிவித்தும் சிறிலங்கா இந்தியாவின் உதவியை நாடவோ, பெறவோ தயாராக இல்லை. அதாவது இந்தியாவில் இருந்து நேசக்கரம் நீண்டபோதும் அதைப் பற்றிக் கொள்ள சிறிலங்கா தயாராகவில்லை.

அத்தோடு சிறிலங்கா இந்தியா தனக்குச் செய்த உதவியையும் முற்றாக மறந்து விட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் சிறிலங்கா அரசாங்கத்திற்காக இந்திய இராணுவத்தின் இரத்தத்தைச் சிந்திய போதும் சிறிலங்கா ஜனாதிபதி உட்பட அரசியல்வாதிகள் நகைத்துக் கொண்டார்களே ஒழிய அனுதாபப்படவில்லை அப்பொழுது சிறிலங்காவின் ஜனாதிபதியாகவிருந்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிங்களவருக்காக இந்திய வீரர்கள் இரத்தம் சிந்துகின்றார்கள் எனத்தெரிவித்தார். அதே வேளை தமது தேவை முடிவடைந்ததும் இலங்கையை விட்டு இந்தியா வெளியேற வேண்டும் என்று சிறிலங்கா அரசியல்வாதிகள் கோசமிட்டனர்.

மீண்டும் இன்று அவ்வாறானதொரு நிலை உருவாகி உள்ளது. இந்தியா சிறிலங்காவுடன் கைகோர்க்கப் பார்க்கின்றது. ஆனால் சிறிலங்கா கைகோர்க்கத் தயாரில்லை.

இவ்வாறான சிறிலங்காவின் போக்கை இந்தியா தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். வரலாற்று ரீதியாக சிங்களவர்கள் இந்தியா மீது கொண்டுள்ள அச்சமும், பாகிஸ்தான் மீதான நட்பிலும் மாற்றம் ஏற்படுத்துவது என்பது இந்தியாவினால் முடியாத காரியமாகும். ஆகையினால் இந்தியா இவர்களில் தனது வரலாற்று நண்பன் யார் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். தமது உள்நாட்டு அரசியல் இலாபங்களுக்காக தேசிய நலன்களைப் புறக்கணித்து விட்டு அரசியல் கட்சிகள் செயற்படுமானால் அவற்றின் பலனை இந்தியா அனுபவிக்க வேண்டிவரும்.

இன்றைய நிலையில் இந்தியா விரும்பியோ, விரும்பாமலோ தமிழீழப் போராட்டம் வளர்ச்சி அடைவதை இந்தியாவால் தடுக்க முடியாது என்பதோடு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிதைத்து விடமுடியாது என்பதையும் கடந்த கால வரலாறு இந்தியாவிற்கு புகட்டியிருக்கின்றது. இதனை மனதிற்கொண்டு இந்தியா தமிழீழ மக்களை தனது வரலாற்று ரீதியான நட்புடன் அணைத்துக் கொள்வதுதான் இந்தியாவின் எதிர்கால நலனுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

## உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



திரு. மாத்தயா, கருணா, விசு ஆகியோருடன் நாம் புறப்பட்டுச் செல்லும்போது காடுகள், பற்றைகள், வயல்வெளிகளில் என்னமாதிரியான நிலையில் அகதிகள் வாழ்கிறார்கள் என்பதை திரு. மாத்தயா பார்வையிட்டார். கரிகாலனின் அலுவலகத்திலும் சில பொது மக்களைச் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தார் மாத்தயா போகும்போது வழியில் ஒரு வயோதிபர் தென்பட்டார். இவரைக் கவனிக்கும்படி விசு கூறினார். அவரைத் தாண்டிச் சென்றதும் 'கோட்டையை நாம் கைப்பற்றினோம் என்பதை அறிந்து பொதுமக்கள் வெடி கொளுத்திச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தபோது இவர் 'இதென்ன பெரிய சண்டை; கப்பலும் கப்பலும் மோதும். இருந்துபார். அதுதான் சண்டை' என்று ஒரு பெரிய பிரசங்கமே செய்துகொண்டிருந்தவர் இவர் என்று குறிப்பிட்டுவிட்டுச் சிரித்தார். அதற்கு மாத்தயா 'போராட்டத்தின் வெற்றிமீது இவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையைத்தான் இது காட்டுகின்றது. தான் பிறந்து வளர்ந்த கிராமத்தைவிட்டு, வீட்டை விட்டு, அகதியாக ஓடிவந்து அடுத்தநேரச் சாப்பாட்டுக்கு என்னவழி என்பது தெரியாத நிலையிலும் போராட்டத்தைப் பற்றிய நம்பிக்கையை இவர்கள் இழக்கவில்லை. அதனால்தான் இவர்கள் இப்படிக் கதைக்கிறார்கள். போராட்டத்தின் வெற்றிமீது அசையாத நம்பிக்கை ஏற்பட்டு விட்டது என்ற வகையில் எமக்கு அது ஒரு பலம்தான்' என்றார்.

> தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை விட்டு, சொந்த வீட்டை வீட்டு, அடுத்த நேரச் சாப்பாட்டுக்கு என்ன வழி என்று தெரியாத நிலையிலும் இந்த மக்கள் போராட்டத்தின் வெற்றி பற்றிய நம்பிக்கையை இழக்கவில்லை. அந்த வகையில் எமக்கு அது ஒரு பலம் தான்!
>
> - திரு. மாத்தயா



பெரியவட்டவான் என்னும் கிராமத்தை அடைந்த போது அங்கே மக்களின் நிலைபற்றி மாத்தயா விசாரித்தார். அதற்கு அங்குள்ள போராளிகள் மருந்து இல்லாத நிலைதான் மக்கள் எண்ணிக்கையைக் குறைத்து வருகிறது என்றார்கள். குழந்தைகளுக்கான மருந்துகள், தடுப்பூசிகள் என்பன பற்றி அவர் கேட்டபோது கிடைத்த பதில் அதிர்ச்சியளிக்கக் கூடியதாக இருந்தது. அக்டோபர் 7ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதி (நாம் அங்கு சென்ற தினம்) வரையிலான ஆறுநாட்களில் ஆறு குழந்தைகள வயிற்றோட்ட நோயினால் பலியாகியுள்ளனர் என்று தெரிவித்தனர். செஞ்சிலுவைச் சங்கப் போன்றவை நகருக்குள் வந்தால் தான் வைத்தியவசதி செய்வோம் என்ற பாணியில் அடம்பிடிக்கின்றன. நகருக்குள் போனால் முஸ்லிம் ஊர்காவல் படையினாலோ, இராணுவத்தாலோ உயிரிழக்க நேரிடும். அதற்கு அஞ்சி இப்படியான இடங்களில் இருப்பவர்கள் நோய்வந்து மடியவேண்டியதுதான். எங்கு சேவை செய்ய வேண்டுமோ அங்கு சேவை செய்வதைவிடுத்து தங்களுக்கு எங்கு வசதியோ அங்கு அவர்களைத்தேடி நோயாளிகள் செல்லவேண்டும் என நினைக்கிறார்கள். செருப்புக்கு அளவாகக் காலை வெட்டும்நிலை.

> பெரியவட்டவான் என்ற கிராமத்தில் அக்டோபர் 7ஆம் திகதியில் இருந்து 12 ஆம் திகதி வரையிலான ஆறு நாட்களில் ஆறு குழந்தைகள் வயிற்றோட்ட நோயினால் மரணமாகி உள்ளன.

# 33

> முன்பெல்லாம் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக பெற்றோர் அவர்களுடன் கூடச் செல்வர். தற்போதோ பெற்றோரின் பாதுகாப்புக்காக குழந்தைகள் அவர்களுடன் செல்கிறார்கள்.

சிவத்தப்பாலம் என்னுமிடத்தில் நாம் நின்றபோது எமது போராளியின் சகோதரி ஒருவரும், அவரது கணவரும், குழந்தையும் வந்தார்கள். நகரிலிருந்து படுவான் கரை வழியாக நீண்டதூரப் பிரயாணத்தின் பின் அவர்கள் வந்திருந்தார்கள். சத்துருக்கொண்டான் பகுதியில் இராணுவத்தினருக்கு கண்ணிவெடி வைத்ததிற்காக நகரில் இராணுவம் வெறியாட்டம் ஆடுகிறது என்றார்கள். பிள்ளையுடன் இவ்வளவு நாளும் நகரிலா இருந்தீர்கள் என்று விசாரித்ததற்கு, இல்லை இங்கே தான் இருக்கிறோம் நகருக்கு சாமான் வாங்கச் சென்றோம். குடும்பஸ்தர்கள் என்றால் கொஞ்சம் மனமிரங்கலாம் என எதிர்பார்த்தே குழந்தையுடன் சென்றோம் எனகுறிப்பிட்டனர். எனக்கு சத்துருக்கொண்டான் சம்பவம் தான் நினைவுக்கு வந்தது. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளையே கொன்றிருக்கிறார்கள். இவர்கள் என்னவென்றால் குழந்தையை நம்பி நகருக்குள் செல்கிறார்கள். முன்பெனறால் பாடசாலைக்கோ, தெருவுக்கோ பிள்ளைகள் போவதென்றால் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக பெற்றோர் செல்வார்கள். இப்போதோ பெற்றோரின் பாதுகாப்புக்காக பிள்ளைகள் செல்கிறார்கள். காலம் தலைகீழாக மாறிவிட்டது.

> எங்கு சேவை செய்ய வேண்டுமோ அங்கு செல்வதை விடுத்துத் தமக்கு வசதியான ஒரு இடத்தில் தாங்கள் இருக்க அங்கு பொதுமக்கள் தம்மை நாடிவர வேண்டுமென நினைக்கிறார்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர்.

போராளிகளின் முகாம்கள் பலவற்றிற்கும் சென்றோம். அப்பகுதியின் கண்ணன் என்ற போராளியே அனைவருக்கும் பொறுப்பாக விளங்குகிறார். (அப்போராளி இப்போது வீர மரணமடைந்து விட்டார்) ஒவ்வொரு முகாமிலும் போராளிகளோடு மாத்தயா உரையாடினார். ஒரு பயிற்சி முகாமின் அனைவரையும் இருத்தி மாத்தயவை உரையாற்ற ஏற்பாடு செய்திருந்தார் கண்ணன். அங்கு மாத்தயா நான் என்ன சொல்ல வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டார் ஒரு போராளி எழுந்து தற்போதைய போரைப்பற்றி விளக்கச் சொன்னார். அவரது கோரிக்கையை ஏற்று தற்போதைய நிலை பற்றி போராளிகளுக்கு விளக்கமாகக் கூறினார் மாத்தயா.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு முகாமைச் சென்றடைந்தோம். அடுத்த நாள் (13 ஆம் திகதி) மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமானது. எனவே அந்த முகாமிலிருந்த அனைத்துப் போராளிகளிடமும மாத்தயாவும் நாங்களும் விடைபெற்றுக் கொண்டோம்.

காட்டுப்பகுதியால் சென்று கொண்டிருந்தோம். முன்னால் செல்லும் ஜீப்பை கருணாவே ஓட்டிச் சென்றார்; அவருக்கு அருகில் மாத்தயா. நீண்ட நேரப் பிரயாணத்தின் இடையில் காட்டில் மரங்கள் முறியும் ஓசை கேட்டது. அந்த ஓசை நெருங்கியது. உடனே பிரேக் போட்டு ஜீப்பை நிறுத்தினார் கருணா. எதிரே ஒரு தனியன் யானை; மாத்தயா இருந்த பக்கமே யானை நிற்கிறது. யானைக்கும் மாத்தயாவுக்கும் இடையில் ஏழு அடி தூரமே இருக்கும்.

(தொடரும்)

ஈராக் மீது போர்தொடுக்கும் அதிகாரத்தை

# பாராளுமன்றத்திற்கு மாற்ற ஜனநாயகக்கட்சி தீர்மானம்

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எதிராகப் போர் தொடுக்கும் உரிமையை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிற்குப் பதிலாக அமெரிக்கப் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் தீர்மானத்தை ஜனநாயகக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றி உள்ளார்கள்.

போர் நடவடிக்கை அமெரிக்க மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் பாராளுமன்றத்தின் முறையான ஒப்புதல் பெறாமல் வளைகுடாவில் இராணுவ நடவடிக்கை எதையும் ஜனாதிபதி புஷ் மேற்கொள்வதை இந்தத் தீர்மானம் தடுக்கிறது.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 177 வாக்குகளும், எதிராக 37 வாக்குகளும் கிடைத்தன.

இதேவேளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேற வேண்டுமென கடுமையாக எச்சரித்துள்ளார்.

அத்துடன் பாக்தாத்தில் இருந்து அனைத்து வெளிநாட்டவர்களையும் விடுவிக்காவிட்டால் அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜேம்ஸ் பேகர் அறிவித்துள்ளார்.

## மன்னிப்பு கோருகிறார் சதாம் உசையின்

(பாக்தாத்)

ஈராக்கில் பணயக் கைதிகளாகஇருக்கும்வெளிநாட்டவர் அனைவரும் விடுதலை செய்யப்படவுள்ளனர். இத்தகவலை ஈராக் ஜனாதிபதி சதாம் உசையின் தெரிவித்துள்ளார். மேலும்பணயக் கைதிகள் விடுதலைதொடர்பாகபேசியஜனாதிபதி சதாம் உசைன் கைதிகள் எவருக்கேனும் புண்படும்படி ஏதாவது நேர்ந்திருக்குமானால் அதற்காக மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்தார்.

## மாணவர் கூட்டம்

மேஜர் மூரளியின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை நினைவு கூர்ந்து நிகழ்ச்சி நடத்துவது தொடர்பாக. விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள் அனைவரையும் மாவட்டச் செயலகத்திற்கு 12. 12. 90 அன்று மூற்பகல் 9 00 மணிக்கு தவறாது வருகை தரும்படி கிளிநொச்சிமாவட்டவிடுதலைபுலிகள் மாணவர்இயக்கப் பொறுப்பானர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக கரையோரங்களில்

## இராணுவத்தைப் பயன்படுத்த மத்திய அரசு தயங்காது

-சுபோத்கான் சகாய்

(டில்லி)

அசாமைப்போல தமிழகத்திலும் கரையோரப் பகுதிகளில் அந்நிய ஊடுருவலை தடுப்பதற்கு இராணுவத்தை ஈடுபடுத்த மத்திய அரசாங்கம் தயங்காது என்று இந்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இந்தியப்பிரதமர் எஸ். சந்திரசேகருடனும் உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாயுடனும் பேச்சுக்கள் நடத்தியது தெரிந்ததே.

இதன் பின்னர் உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டிக்கும், ஒற்றுமைக்கும் குந்தகமாக எந்த வொரு செயலையும் மத்திய அரசாங்கம் சகித்துக்கொள்ளாது என்று சுபோத்கான் சகாய் கூறியதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

தமிழகத்தில் எந்தவொரு நாட்டவரும்வன்முறையில் ஈடுபடுவதை அனுமதிக்கக்கூடாது எனமத்திய அரசாங்கம்தமிழக முதலமைச்சருக்கு எடுத்துரைத்ததாகவும், கடலோர ரோந்துப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

### தென்மராட்சியில்

குண்டு வீசப்பட்டதால் புகையிரத நிலையம் சேதமடைந்தது.

சரசாலை ப. நோ கூ சங்கத்தில் நிவாரணம் பெறுவதற்கு கூடிநின்ற மக்கள் கூட்டத்தைநோக்கி இரண்டாவது தடவையாக 11 45 மணியளவில் குண்டுகள் வீசப்பட்டன. கணபதிப்பிள்ளை இருமஞ்சனம் என்ற (வயது 60) மூதாட்டி ஸ்தலத்திலேயே மரணமானார். வேலுப்பிள்ளை கார்த்திகேசு (வயது 65) உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுச் சாவகச்சேரிச் சந்தை நாள் ஆகையால் காலையில் குண்டு வீச்சுக்குப் பயந்து சந்தையிலுள்ள மக்கள் வாரிநாதர் கோயிலை நோக்கிப் பாதுகாப்பை நாடி ஓடினர். கோயில் மீது வீசப்பட்ட குண்டினால் நா. மயிலன் (வயது 36), குமாரசாமி இராசம்மா (வயது 73) ஆகியோர் காயமடைந்தனர். (லோ) (85)

### பொலிஸ்

தேசிய அடையாளஅட்டைக்கு விண்ணப்பிக்கமுடியாது கஷ்ட நிலையை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையைப் போக்கும் பொருட்டு யாழ். அரச அதிபர் கடிதமூலம் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தை கேட்க உள்ளதாகத் தெரிவித்தார். (லோ)

## சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒப்பந்தவேலை மேற்கொண்ட அனைத்து கட்டட ஒப்பந்தக்காரரும் நாளை 8ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திற்கு தவறாது வரும்படி வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கச் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார்.

### பருத்தித்துறையில்

பஞ்சநாதன் பிரான்சிஸ் (வயது 35) ஒருவரும், கற்கோவளத்தைச் சேர்ந்த இந்திராணி (வயது 35), மாதனையைச் சேர்ந்த முருகேசு கணபதிப்பிள்ளை (வயது 65) ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்,


மேலும் பொ. மகாதேவாவுக்குச் சொந்தமான சி. எம். ஈ. கல்வி நிலையம், டாக்டர் வடிவேலுவின் தனியார் வைத்தியநிலையம், அவரது வீடு, கமலா புத்தகக் கடை, ரதீஸ் ஸ்ரோர்ஸ் அதனுடனான களஞ்சியக் கட்டடம் ஆகியவை பலத்த சேதமடைந்துள்ளன.

இந்தத் தாக்குதலில் வேலாயுதம் மகாவித்தியாலயம் சிறு சேதத்திற்குள்ளானது. (82)

### விமானக்

அடுத்துக் கொல்லன்கலட்டிப் பகுதிகளில் வீசிய இரண்டு குண்டுகளினால் டாக்டர் நாகமணி, ஆசிரியை செல்லப்பா, தபாலதிபர் தில்லையம்பலம் ஆகியோரின் வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இதேவேளை கீரிமலை கடற்பகுதியிலிருந்து தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் இப்பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.




## 140 ஈ. பி. டீ. பி., 160 புளட் எம்முடன் சேர்ந்துள்ளனர்

– ரஞ்சன்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஒழிப்பதற்கு ஆதரவாக 140 ஈ. பி. டீ. பி. குழுவைச் சேர்ந்தவர்களும், 160 புளட் குழுவைச் சேர்ந்த நபர்களும் எம்முடன் இணைந்து செயலாற்றுகின்றனர் என சிறிலங்கா பெருந்தோட்டதுறை அமைச்சரும்பாதுகாப்புராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்றவாராந்தபத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ரஞ்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிநாட்டு உள்நாட்டு செய்தி நிருபர்கள் பலர் பங்குபற்றினர்.

## இறுதிநாள்

''தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு'' புகைப்படக் கண்காட்சியின் இறுதி நாள் இன்றாகும்.

## காலமானார்

மலேசியாவின் முன்னாள் பிரதமரான திரு. துங்கு அப்துல்ரகுமான் (84) நேற்றுக் காலை இயற்கை எய்தினார். அவரது வேண்டுகோளின்படி அவரது சடலம் இன்று யுத்த வீரர்களின் சமாதியருகே நல்லடக்கம் செய்யப்படும்.

### பலாலியிலிருந்து

மடைந்தனர் இராசம்மா (60 வயது) சரஸ்வதி (33வயது) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்கள். தனபாலசிங்கம் (41வயது) அவரின் இருபிள்ளைகளான திலீபன் (5 வயது) விதர்சன் (2வயது) ஆகியோர் காயமடைந்தனர். இதில் விதர்சன் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் உள்ளார்.

கோப்பாயில், வீழ்ந்து வெடித்த மூன்று ஷெல்லினால், செல்வரஞ்சிதம் (56 வயது) காயத்திற்குள்ளார்.

### சர்வதேச

இந்திய அமைதிகாக்கும் படை வடக்கு-கிழக்கில் மனித உரிமைகளை மீறியமை தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்க நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துதல்.

இந்தப் பிரச்சார இயக்கத்தைப் பயன்பொருத்தமானதாகச்செய்ய மனித உரிமைகள் மீறல் தொடர்பான புகைப்படக் கண்காட்சிகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் ஆகியவற்றை நடாத்துமாறு சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

### மாவீரர்

பவர்களிடம் ,இத்தகையநிபந்தனை விதிக்கப் படுவதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம்(5-12-90) குழந்தைகளுக்கான போஷாக்கு உணவை நிவாரணமாகப் பெறச் சென்ற குருநகர் 2ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஒருவர் பதிவு அட்டையில் வீதியின்பெயரை 'ஜீவன் வீதி' எனக் குறித்துக்கொடுத்ததை சங்கம் நிராகரித்துள்ளதாக மேற்படி நபர் தெரிவித்தார். (21)

### முரண்பாடான...

தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் படி இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை மட்டுமேநடாத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என இருந்தது ஆனால் அண்மையில் கல்வி, உயர்கல்வி அமைச்சர் தொண்டர் ஆசிரியர்களுக்கு போட்டிப்பரீட்சை ஒன்று நடாத்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நியமனம் தொடர்பாக குழப்பநிலை உருவாகியது. (க)

### உணவு ..

வாராந்தம் பங்கீட்டு உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

அண்மையில் அரசாங்க அதிபருக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் விளைவாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் முகாம்கள் தொடர்பான பிற சேவைகளை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை வாராந்த உணவுப் பங்கீட்டை அனுமதி அட்டைகள் முகாம்களுக்கு உறுதிப்படுத்துவதால், இடம் பெயர்ந்து செல்லவேண்டிய சந்தர்ப்பங்களில் அனுமதி அட்டைகளை எடுத்துச்செல்ல வேண்டியது அவசியமாகும்.

### நோக்கம்...

காயமடைந்த நாதன் தம்மிடமிருந்த கைக்குண்டின் ''வில்''லை இழுத்தபடி குப்புறக் கிடந்தார். இராணுவத்தினரோ ரெஜோவினரோ அவரை அண்மிக்காமலேயே தமது முற்றுகையை முடித்துச் சென்றுவிட்டனர்.

இராணுவத்தினர் சென்றதும் அவரைக்காக்கும் நோக்குடன் சென்ற ஒரு பொதுமகன் குற்றுயிராய்க் கிடந்த நாதனை மீட்க முயற்சித்தபோது நாதனின்கீழிருந்த குண்டு வெடித்து நாதனும் அந்தப் பொதுமகனும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.

### மீளப்பெற

இணங்க ஒய்வூதியம் பெறுவதற்கு விண்ணபபித்த யாழ். மாவட்ட கல்வித்திணைக்கள அதிகாரிகளும் ஆசிரியர்களும் தமதுவிண்ணப்பங்களை மீளப் பெறமுடியாது என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# மரண அறிவித்தல்

## திருமதி கண்ணம்மா நல்லதம்பி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கண்ணம்மா நல்லதம்பி அவர்கள் 6. 12. 90 அன்று காலமானார்.

அன்னார் கொழும்பு பிரபல வர்த்தகர் வெண்கலக் கடை நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினசபாபதி (கனடா), அம்பிகாதேவி, கமலாதேவி (இந்தியா), தவமணிதேவி (டுபாய்), தர்மராசா (அலுமினியம் தொழிற்சாலை, யாளல) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி (இந்தியா), Dr. சண்முகரத்தினம், சிவநாதன் (கணக்காளர், இந்தியா), குணரத்தினம் (பொறியியலாளர், டுபாய்), நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவாஸ்கரன், சுரேசன், ஜனகன், சரவணன், செந்தூரன், சிவசுதன், சிவவர்மன், சிவதாரணி, பிரசாந்தன், லாவண்யா, குவேரன், தர்மிதா, சுரேந்திரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் 8 - 12 - 90 சனிக்கிழமை புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மணல்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

10-ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
சு. கோபாலபிள்ளை
(தம்பியார்)

(R 908)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.